விலை : ரூபா 3/50

# இந்து கலா சாரம்

இந்து சமய திங்கள் வெளியீடு

கௌரவ ஆசிரியர்: திரு. ஆர். வைத்தமாநிதி

மலர் : 2 ★ திருவள்ளுவர் ஆண்டு 2021 மாசித் திங்கள் 15ஆம் நாள் (15-2-1990) ★ இதழ் : 2

# இந்துகலாசாரம் ஓர் பக்தி ஏடு!



இந்துகலாசாரம் வெளியீட்டு விழாவில் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி கோவில் அறங்காவலர் சபைத்தலைவர் திரு. வி. டி. வி. தெய்வநாயகம்பிள்ளை அவர்கள் பிரதம அதிதியாக கலந்துகொண்ட இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் அவர்களிடம் ரூபா 2001 அன்பளிப்பாக கொடுத்து முதல் பிரதியை பெற்றுக்கொள்வதையும் மன்றத்தலைவர் திரு. ஆர். வைத்தமாநிதி, திரு. ஜி. விஸ்வநாதபிள்ளை. திரு. மகேசன் ஆகியோர் அருகில் நிற்பதை மேலேயுள்ள படத்திலும், கீழேயுள்ள படத்தில் விழாவுக்கு வருகை தந்தவர்களில் ஒரு பகுதியினரான [இடமிருந்து வலம்] திருவாளர்கள் மகேசன் சைவசிகாமணி ஏ. முத்துக்குமாரசாமிப்பிள்ளை, வி. டி. வி. தெய்வநாயகம்பிள்ளை, ரி. செந்தில்வேள், ஜி, விஸ்வநாதபிள்ளை, கொழும்பு தமிழ்ச்சங்க பொதுச்செயலாளர் கந்தசாமி, சைவ முன்னேற்றச் சங்க மாதரணி செயலாளர் திருமதி இராஜேஸ்வரி நவரத்தினம் முதலியவர்களைக் காணலாம்.

" இந்துக்களின் கலாசாரம் தொன்மையும் புனிதமும் கொண்டது. இதன் தலைப்பைக் கொண்டு பணியாற்றி வரும் இந்து கலாசாரம் ஒவ்வொரு இதழும் சிறப்பம்சங்கள் கொண்டு விளங்குவதோடு இந்து சமய வளர்ச்சி கருதி செயலாற்றுவது எல்லோராலும் விரும்பத்தக்க தொன்று. பல்லாண்டு காலம் இந்து மக்களுக்கு தன்னுலான கருத்துக்களையும் புதிய கண்ணோட்டங்களையும் செலுத்தி பாடுபட வேண்டுமென இந் நன்நாளில் இதன் நிர்வாகஸ்தர்களை கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு இந்துசமய கலாசார தமிழ் விவகார இராஜாங்க அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் இந்து கலாசார சிறப்பிதழ் வெளியீட்டு விழாவில் பேசுகையில் கூறினார்.

இந்து கலாசாரம் திங்கள் இதழின் முதலாவது ஆண்டு சிறப்பிதழ் வெளியீட்டு விழா அண்மையில் கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்க நால்வர் மணி மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவுக்கு கொழும்பு இந்துக் கலாசார மன்றத்தின் தலைவர் திரு. ஆர். வைத்தமாநிதி தலைமை வகித்தார். திரு. வி பி. சாமி அவர்களின் தேவாரத்துடன் விழா ஆரம்பமாகியது.

இந்து கலாசார மன்றததின் சார்பாக திருமதி அ. யோகசுந்தரம் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார். அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறியதாவது:-

சமய உணர்வுகளையும் அதன் தொன்மைகளையும் வெளிப்படுத்தி மேலும் பல புதிய அம்சங்களை தாங்கி வருங்காலத்தில் இந்து கலாசார இதழ் வெளிவர வேண்டுமென்பதே எனதவா. இந்து கலாசாரத்தின் பணி மேலும் தொடர என் இதயம் கனிந்த நல்லாசிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து கொழும்பு விவேகானந்த சபை பொதுச் செயலாளர் திரு. இராஜுபுவநேஷ்வரன் ஜே.பி.பேசுகையில் இந்துகலாசாரம் ஆரம்ப முதல் அதன் வளர்ச்சியில் தான பெரும் அக்கறை கொண்டிருப்பதாகவும் அதன் வளர்ச்சிக்கு தன்னுலான எல்லா உதவிகளையும் செய்யக் காத்திருப்பதாகவும் கூறினார்.

தினகரன் பிரதம ஆசிரியர் திரு. ஆர். சிவகுருநாதன் அடுத்து பேசுகையில், 'இந்து சமயப்பணிக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள இந்து கலாசார பக்தி ஏடு தலைநகரில் இரு பெரும் இலட்சியப் பணிகளை செய்து விடத் துடிக்கிறது' என்று கூறினார்.

[15ம் பக்கம் பார்க்க]

# நமது நோக்கு

## நமது இலட்சியப் பணி

இந்து சமய வளர்ச்சியை குறிக்கோளாகக்கொண்டு கடந்த ஒரு வருடமாக கொழும்பிலிருந்து நமது இந்து கலாசாரம் என்னும் இந்து சமய திங்கள் இதழ் வெளிவருவதை நேயர்கள் அறிவார்கள்.

கடந்த ஆண்டில் நமது இதழுக்கு வாசக அன்பர்களும், இந்து சமய ஸ்தாபனங்களும் சமயப் பெரியர்களும் ஆதீனங்களும் குறிப்பாக இந்து சமய கலாசார தமிழ் விவகார அமைச்சும் பெரும் ஆதரவளித்துள்ளதை நன்றியுடன் குறிப்பிடவிரும்புகிறோம்.

கடந்த வருடத்தில் நமது பணி சிறிதாயினும் குறிப்பிடத்தக்க அளவு பணியாற்றியுள்ளோம். நமதுபணிகளைப் பற்றி தமிழ் தேசிய தினசரியான தினகரன் பத்திரிகை கூறுவதாவது:-

இந்து சமயப் பணிக்காகத் தன்னை அர்ப்பணித்துள்ள இந்தப் பக்தி ஏடு கொழும்புத் தலைநகரில் இரு பெரும் இலட்சியப் பணிகளைச் செய்துவிடத் துடியாய்த் துடிக்கிறது.

- இலங்கையில் இருபத்தொரு இலட்சம் இந்துப் பெருங்குடி மக்கள் வாழ்கின்ற போதிலும் தலைநகரில் அவர்களுக்கென ஓர் இந்துக் கலாசார நிலையம் இல்லாக் குறையை நிறைவு செய்தல்.
- நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் குரு மகா சந்நிதானம் அவர்களுக்கு கொழும்பில் ஒரு மடம் எழும்பி அரசு ரீதியில் சகல மத குருமார்களுக்கும் கிடைக்கப் பெற்றுள்ள அங்கீகாரங்கள் இந்து குரு மகாசந்நிதானத்துக்கும் கிடைக்க வழி செய்தல்.

எனவே இந்துப் பெருங்குடி மக்களின் பேராதரவுடன் நமது இலட்சியப் பாதையை தொடர்வோம் என உறுதியாகக் கூறுகிறோம்.

சமயப் பெரியார்களும் சமய ஸ்தாபனங்களும் தொடர்ந்துநம்மை ஆதரித்து ஊக்குவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

## ஓர் விண்ணப்பம்

கடந்த ஆண்டில் நமது இந்து கலாசார இதழுக்கு வாசக அன்பர்களும், இந்து சமய ஸ்தாபனங்களும், சமயப்பெரியார்களும் குறிப்பாக இந்து சமய கலாசார தமிழ் விவகார அமைச்சும் பெரும் ஆதரவளித்துள்ளதை நன்றியுடன் குறிப்பிட விரும்புகிறோம்.

ஆரம்ப முதல் ஒவ்வொரு இதழிலும் இந்து சமயத்தின் தொன்மை, அதன் புனிதம், சிறப்பு முதலிய அம்சங்களைக் கொண்ட அரிய கட்டுரைகளை வெளியிட்டு வந்திருக்கிறோம்.

சமயப் பெரியார்கள் பலர் பொருளுதவி செய்துள்ளனர். விளம்பரங்கள் தந்துள்ளனர். ஆக்கமும் ஊக்கமும் அளித்து நம்மை உற்சாகப் படுத்தி இருக்கிறார்கள்.

ஆரம்பத்தில் நாம் சந்தா தாரர்களை சேர்க்க விரும்பவில்லை இதழை தொடர்ந்து நடத்துவதற்கு போதிய ஆதரவு கிடைக்குமோ என்ற சந்தேகம் இருந்தது.

இந்த ஒருவருட காலத்தில் நமக்கு கிடைத்து வரும் ஆதரவையும் உதவியையும பார்க்கும் போது இவ்விதழை தொடர்ந்து நடத்த முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இந்த உண்மையை வாசக நேயர்களுக்கு தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

வடக்கு-கிழக்கு மலையகம் மற்றும் இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், மலேஷியா முதலான கடல் கடந்த நாடுகளிலும் இவ்விதழுக்கு பெரும் ஆதரவும் வரவேற்பும் இருக்கிறது.

இந்து கலாசாரம் ஆரம்ப முதல் ஒரு வருட காலம் வரை அதன் விலையை தனிப்பிரதி விலை ரூபாய் 2/-(அதுவும் நன்கொடை) ஆண்டுச் சந்தா ரூபாய் 30/- என்றே வெளியிட்டு வந்திருக்கிறோம். சுமார் ஆயிரம் பிரதிகள் ஆலயங்கள், பாடசாலைகள், நூலகங்களுக்கு இலவசமாக அனுப்பிக் கொடுத்திருக்கிறோம்.

இன்று காகித விலையும் அச்சுக்கூலியும் எப்படிக் கூடிக்கொண்டு போகிறது என்பது நேயர்களுக்கு தெரியாததல்ல. இதனால் இந்து கலாசாரத்தின் விலையைக் கூட்ட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நாம் ஆளாகியுள்ளோம். என்பதை நேயர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம். இனி தனிப்பிரதியின் விலை ரூபா 3.50 ஆகவும் ஆண்டுச் சந்தா ரூபா 50.00 ஆகவும் இருக்கும்.

கொழும்பு இந்து கலாசார மன்றத்தின் இந்த அரிய பணிக்கு வாசக நேயர்களும் இந்துப் பெருமக்களும் தொடர்ந்து ஆதரவளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

வணக்கம்

இவ்வண்ணம்

ஏ. எம். துரைசாமி
பொதுச் செயலாளர்
கொழும்பு இந்து கலாசார மன்றம்

# பத்திரிகையாளர் இரத்தினம் சிறந்த ஒரு சாயி அன்பர்

அண்மையில் எம்மை விட்டுப் பிரிந்து சென்ற பத்திரிகையாளர் அமரர் வி. ரி. இரத்தினம் சமய, சமூகப் பணிகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

சிறந்த சாயி தொண்டராகவும், சாயி அன்பராகவும் விளங்கிய அமரர் இரத்தினம், ஒரு பக்தனுக்குரிய குணம்சங்களுடன் வாழ்ந்து காட்டியவர். இதனால் அவர் தன்னோடு பழகிய அனைவரினதும் மாறாத அன்பைப் பெற்றுக்கொண்டார்.

சிலரை சிலர் விரும்பலாம், ஆனால் எல்லோரும் எல்லாரையும் விரும்புவதில்லை. இது நியதி. எனினும் இதற்கு விதிவிலக்காக எல்லோராலும் விரும்பப்பட்டவர் அன்பாக மதிக்கப்பட்டவர் ஒருவர் எம் மத்தியில் வாழ்ந்தார்.

இந்த 20ஆம் நூற்றாண்டிலும் எம் மத்தியில் எல்லோராலும் விரும்பப்பட்டவரும், மதிக்கப்பட்டவரும் பாராட்டப்பட்டவருமான ஒருவர்தான் அமரர் வி. ரி. இரத்தினம்.


இவர் சாதாரண இரத்தினம் அல்லர், எல்லோருக்கும் இனிய இரத்தினம். விலை மதிக்க முடியாத இரத்தினமாக ஜொலித்த அமரர் இரத்தினம் இன்று எம்மை எல்லாம் விட்டு இறைவனடி சேர்ந்து விட்டார்.

அவர் இறந்துவிட்டார் என்றோ இல்லை மறைந்து விட்டார் என்றோ எம்மால் கருதமுடியவில்லை. அப்படி எண்ணிப்பார்க்கவும் முடியவில்லை. அவர் ஆற்றிய பணிகள், புரிந்த தொண்டுகள் உருவாக்கிய வாரிசுகள், அனைத்திலும் இரண்டறக் கலந்து ஐக்கியமாகி விட்டார் என்பதே சரி.

அன்னாரின் பூதவுடல் மறைந்துவிட்டாலும், புகழ் உடல் மறையவில்லையே. அது எப்படி மறையும். இந்த உலகம் இருக்கும்வரை நிலைத்திருக்கும். ''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று'' என்றார் வள்ளுவர்.

தெய்வப் புலவராம் திருவள்ளுவ நாயனாரின் வாசகத்திற்கு ஏற்ப செந்தமிழ் செழிக்கும் யாழ். நகரின் சுந்தர் மடத்தில் வெங்கடாசலம், தம்பியப்பா, திருமதி பராசக்தி தம்பியப்பா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராக 1929ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆறாம் திகதி இப்புவியில் அவதரித்தார்.

அன்புத் தந்தையினதும், அருமை தாயாரினதும் அரவணைப்பில் யாழ். நகரில் கல்வி கற்று தொழில் நிமித்தம் தலைநகரம் - கொழும்பு வந்தார். பிரபல வர்த்தக நிறுவனமான மில்லர்ஸ் அன்கோவில் தட்டெழுத்தாளராக உத்தியோகத்தில் அடியெடுத்தார்.



பின்னர் இயற்கை வளம் நிறைந்த மலையகத்தில் தனித்துவத் தலைவர் என்று கூறப்படும் தலைவர் திரு. எஸ். தொண்டமானுக்கு சொந்தமான வெவண்டன் தோட்டத்தில் சிரேட்ட உதவி எழுதுவினைஞராக பணிபுரிந்தார்.

அங்கு தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை கண்டு மனம் வெதும்பினார். தன்னால் இயன்ற அளவு உதவிகளைச் செய்து எல்லா தொழிலாளர்களினதும் நன் மதிப்பைப் பெற்றார்.

தனது பள்ளிப் பருவ முதலே எழுத்துத் துறையில் ஆர்வம் கொண்ட இவர் தேசிய தமிழ் பத்திரிகைகளில் ஒன்றான தினகரனில் (லேக்ஹவுஸ்) ஒப்புநோக்காளராகவும், பின் அலுவலக நிருபராகவும் சுமார் 20 வருடங்கள் சேவையாற்றினார். இக் காலகட்டத்தில் கொழும்பில் உள்ள பெரியார்களினதும், கல்விமான்களினதும், சமயப் பெரியார்களினதும் நட்பை வளர்த்துக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து விவேகானந்த சபை, கதிர்காம தொண்டர் சபை, கொழும்பு இந்துமிஷன் முதலான சமய ஸ்தாபனங்களில் பிரதான உறுப்பினர்களில் ஒருவராக இடம் பிடித்தார்.

— ஆர். பி. வி. மணி—
(கொழும்பு)

சமயப் பணிகளிலும் சமூகப் பணிகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட இவர் தனது 30ஆவது வயதில் இல்லற வாழ்க்கையில் நாட்டம் கொண்டார். 1959ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26ஆம் நாள் வி. கே. சேனாதிராஜா தம்பதிகளின் அருந்தவப் புதல்வியாம் மகேஸ்வரியை காதல் மனைவியாகக் கைப்பிடித்தார்.

''தற்காத்துத் தற்கொண்டாள் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''

என்ற ஈரடிகளுக்கேற்ப தன்னையும் காத்து, தன்னை சார்ந்தவர்களையும் காத்து, குடும்ப கௌரவத்தையும் காப்பதில் சிறிதும் களைப்படையாத மகேஸ், சாந்தகுமார், ராஜ்குமார், செந்தில்குமார் என மும்மூர்த்திகளைப் புத்திரர்களாகவும் ஏக புதல்வியாக சுகந்தியையும் பெற்றுப் பெருமை சேர்ந்தார்.

இலட்சிய தம்பதிகளின் இல்லறத்திலும் சில சோதனைகள் மீண்டும் சில இடமாற்றங்கள், தொழில் மாற்றங்கள் இடையில் சில காலம் தலை நகரை விட்டுச் சென்று எட்டியாந்தோட்டை இங்கோயா தோட்டத்தில் சிரேஷ்ட எழுதுவினைஞராக பதவி ஏற்றார்.

அங்கும் சமுகச் சேவையிலும், சமயத் தொண்டிலும் முற்றுகத் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார். ஆனால் இவரால் அங்கு தொடர்ந்து பணியாற்ற முடியவில்லை.

இவ் வேளையில்தான் பத்திரிகை உலகின் ஜாம்பவான் என வர்ணிக்கப்படும் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் திரு. எஸ். டி. சிவநாயகம் அவர்களின் அன்பான அழைப்பை ஏற்று தினபதி சிந்தாமணி பத்திரிகைகளில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார்.

இத்துறையில் அவர் காட்டிய ஆர்வமும் அயராத உழைப்பும் துரிதகெதியில் அவரை இப் பத்திரிகைகளின் செய்தி ஆசிரியராக பதவி உயர்த்தியது. உயர் பதவில் இருக்கின்றோம் என்ற மமதை சிறிதும் இல்லாத இவர் எல்லோரிடமும் பாசமுள்ள ஒரு தந்தையாகவே இருந்தார்.

செய்தி ஆசிரியராக இருந்த காலத்தில் இவரால் வழி நடத்தப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்ட பலர் இன்னும் அவரது வாரிசுகளாக அங்கு திகழ்கின்றார்கள்.

பெயர் சொல்ல ஒரு பிள்ளை என்பார்கள். ஆனால் இன்று பத்திரிகை துறையில் இவர் பெயர் சொல்ல, மதிக்க எத்தனையோ பிள்ளைகள் இருக்கின்றனர். இதனால் ஒரு அதிகாரியாகக் கருதப்படாமல் எல்லோராலும் 'இரத்தினம் ஐயா' என்று அழைக்கும் அடைமொழிக்குள் சிக்கிக்கொண்டார். எல்லோருக்குமே 'ஐயா' வானார்.

உடல் நிலையில் ஏற்பட்ட இயலாமையினால் பத்திரிகை துறையில் இருந்து ஓய்வு பெற்று தம்மை ஒரு முழு நேர சமயத் தொண்டராக மாற்றிக்கொண்டார்.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவை நேரடியாகக் கண்டு ஆசிபெற்ற மிகச் சிலரில், ஒருவரான இவர் பின்னர் கொழும்பில் உள்ள ஸ்ரீ சத்திய சாயி மத்திய நிலையத்தின் பொதுச் செயலாளராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

அன்னார் பொதுச் செயலாளராக தெரிவாகிய பின் இடம்பெற்ற சாயி பகவானின் 64ஆவது பிறந்த நாள் விழாக் கொண்டாட்டங்களை மிகச் சிறப்பாக நடத்த வேண்டும் என்று ஆர்வம் கொண்டு, அதில் வெற்றியும் கண்டார்.

இரத்தத்தோடு இரத்தமாக ஒன்றிவிட்ட இவரது சேவை உணர்வு மீண்டும் இவரை சும்மா இருக்க விடவில்லை. சில உண்மையான நண்பர்களின் கோரிக்கையின் பேரில் அமைச்சர் காமினி திஸாநாயக்காவின் தலைமையில் இயங்கும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் மாத சஞ்சிகையின் தேசிய முரசொலியின் பொறுப்பாசிரியராகவும், வெளியீட்டு ஆலோசகராகவும் சேவையாற்றினார்.

தமிழராகப் பிறந்தபோதும் இன, மொழி பேதங்களுக்கு அப்பால் தமிழ், சிங்கள, இஸ்லாமிய சமூகத்தவர்களுடன் நல்லுறவை வளர்த்துவந்தார். தன் வீட்டிற்கு மட்டுமல்ல, இந் நாட்டிற்கே சொந்தம் என எல்லோராலும் கொண்டாடப்பட்டார்.

திடீரென ஏற்பட்ட சுகயீனத்தை அடுத்து 1990 ஜனவரி 20ஆம் நாள் எம்மிடம் இருந்து பிரிந்து இறையடி சேர்ந்து கொண்டார்.

---

# ஆலயத்திற்குத் தேவையான சில அருமருந்தாகலாம்

வில்வ இலை :— கண்களில் நமைச்சல், கண் சிவப்பு நிறமடைதல் போன்ற கோளாறுகளின்போது வில்வ இலையின் தளிரைச் சேகரித்து வதக்கி கண் இமைகளில் ஒற்றடம் கொடுத்தால் சிறப்பான குணத்தை தரும்.

துளசி இலை :— இருதயம் பலவீனமானவர்களுக்கு தேன் சம அளவு கலந்து கொடுக்கவேண்டும். ஒரு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு இதைக் கொடுத்து வந்தால் சளி நோயைப் போக்கலாம்.

மஞ்சள் :— இளம் சூடான பசுப் பாலில் சிறிது மஞ்சள் தூளை போட்டு 4, 5 நாள் குடித்து வந்தால் இருமல் நோய் தீரும் ஆறாத புண்களை சுத்தம் பண்ணிவிட்டு மஞ்சள் தூளை தடவினல் ஆறிவிடும். மஞ்சள் கிழங்கை பொடி செய்து சமமாக சர்க்கரை சேர்த்து 2 — 3 நாட்கள் சிறிதளவு சாப்பிட்டால் வயிற்றுப் பெருமல் நீங்கும்.

தேன் :— உடற் பருமன் குறைய காலையில் வெறும் வயிற்றில் வெந்நீரில் தேனைக் கலந்து அருந்துக. குழந்தைகள் பேச நாவில் தேனைத் தடவலாம். காது வலி, சீழ் வடிதல் நிற்க வெள்ளை குங்கிலியம், கல்லுப்பு ஆகியவற்றை தேனிவிட்டு அரைத்து காதில் சொட்டு சொட்டாக விடவேண்டும்.

வாழைப்பழம் :— தீப்புண் ஏற்பட்டு விட்டால் நன்ருக கனிந்த வாழைப்பழத்தை பிசைந்து அதன் மேல் பூசிவிட்டால் குணமாகும்.

மாதுளம் பழம் :— சிறு பிள்ளைகளுக்கு பூச்சி இருந்தால் மாதுளம்பழத்தை தேனில் ஊற வைத்து சாப்பிடக் கொடுத்தால் மிக நல்லது.

துளசி :— ஞாயிறு, திங்கள், செவ்வாய், வெள்ளியும் திருவோண நட்சத்திரத்திலும் அஷ்டமி, துவாதசி, சதுர்த்தி, பௌர்ணமி அமாவாசை நாட்களிலும் இரவு மாலை வேளையிலும் துளசியை செடியில் இருந்து எடுத்தலாகாது.

— கனகா.

# மானிட வாழ்வில் மறக்க வேண்டாத இரண்டு

● ஆத்மஜோதி நா. முத்தையா

மனிதன் எப்போதுமே இரண்டு விடயங்களை மறக்கக் கூடாது. ஒன்று ஆண்டவன்; அடுத்தது அறம். ஆண்டவன் வேறு, அறம் வேறு அல்ல. ஆண்டவனே தருமம்: தருமமே ஆண்டவன். ஆனபடியால் தான் இந்துக்களாகிய நாம் ஆண்டவனாகிய சிவனை தருமமாகிய இடபத்தின் மேல் ஏற்றிப் போற்றி மகிழ்கின்றோம். பெரியபுராணத்தில் வரும் சிவனடியார்களுக்கு காட்சி கொடுத்த எம்பெருமான் இடபத்தின் மீதேறியே காட்சி கொடுத்ததாகச் சரித்திரங்கள் பேசுகின்றன.

மூன்று வயதிலே தேவாரம் பாடிய ஞானசம்பந்தப் பெருமான் முதலாவது தேவாரத்தின் முதல் வரியிலேயே ''தோடுடைய செவியன் விடை ஏறி'' என்று கூறுகின்றார். தோடு உமாதேவியாரையும் செவியன் சிவபெருமானையுங் குறிப்பதோடு இறைவன் அர்த்தநாரீச்சுர வடிவினன் என்ற ஆழ்ந்த பொருளையும் வெளிப்படுத்திக் காட்டுகின்றது. விடை ஏறி என்பதால் இறைவனையும் தருமத்தையும் பிரிக்க முடியாது என்ற தத்துவத்தையும் விளங்க வைக்கின்றது.

இறைவனை மறவாதிருப்பதற்கு வழி என்ன? என்றொரு கேள்வி எழுகின்றது. கலியுகத்தில் கடவுளோடு தொடர்பு கொள்வதற்கு நாம சங்கீர்த்தனம் ஒன்றுதான் வழி என்பதனை கலியுகம் தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை தோன்றிய மகான்கள் நாம சங்கீர்த்தனத்தையே வற்புறுத்திக் கூறியுள்ளார்கள்.

கலியுகம் பிறந்தபோது வியாசருடைய தலைமையிலே ஒரு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் எல்லோருமே முனிவர்கள்தான். வியாசர் உட்பட எல்லா முனிவர்களும் கவலைதோய்ந்த முகத்தினராகக் காணப்பட்டார்கள். முனிவர்களுக்குக் கவலை ஏன் என்று சிலர் கேட்கலாம். அவர்கள் தங்களுக்காகக் கவலைப்படவில்லை. எங்களுக்காகவே கவலைப்பட்டார்கள். ஒரு முனிவர் எழுந்து மௌனத்தைக் கலைத்தார். கலியுகத்திலே வாழப்போகிற மக்கள் கவலையை நீக்க வழி என்ன என்றுதான் கேட்டார். வியாசர் தலைநிமிர்ந்தார். அத்தனை முனிவர்களுடைய கண்களும் வியாசருடைய முகத்தையே உற்று நோக்கின, வியாசர் வாய் திறந்தார்.

''ஸ்கந்தஸ்ய கீர்த்திம் அதுலாம்
கலிகல்மஷநாசிவம்''

என்ற வார்த்தைகள் ஒலித்தன. அதாவது நாம சங்கீர்த்தனம் ஒன்றுதான் கலியிலே வரும் பாவங்கள் அத்தனையையும் போக்கவல்லது. அதாவது கந்தனுடைய புகழ் ஒன்றுதான் கலியிலே வரும் பாவங்கள் அத்தனையையும் போக்கவல்லது. பெரிய பெரிய ஜீவன்முக்தர்கள் எல்லோருமே இதனையேதான் கூறியுள்ளார்கள்.

வேறு சாதனைகளுக்கு இல்லாத வலுவும் இலகும் நாம சங்கீர்த்தனம் ஒன்றுக்கேதான் உண்டு. நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், நடந்தாலும், மென்றாலும், துயின்றாலும், விழித்தாலும், இமைத்தாலும் ஆகிய எந்த நேரத்திலும் நாமஜெபம் செய்யலாம். சங்கராச்சாரிய சுவாமிகள் ஒருமுறை சொன்னார்; கலியுகத்தில் பிறந்தவன் பாக்கியசாலி என்றார். காரணம் கலியுகம் ஒன்றிலேதான் ஆண்டவன் நாமத்தை காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க ஒருமுறை ஓதினாலே இறை தரிசனம் கிடைத்துவிடும் என்றார்.

''ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது, வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது நாதன் நாமம் நமச்சி வாயவே''
என்று திருஞானசம்பந்தரும்,

''நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே''
என்று நாவுக்கரசரும்,

''நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே''
என்று சுந்தரரும்,

'உன் நாமங்கள் பேசுவார்க்கு இணக்கிலாத
தோர் இன்பமே வரும் துன்பமே துடைத்து''
என்று மணிவாசகரும்,

''நன்று கண்டாயது நமச்சிவாயக்கனி, தின்று கண்டாலது தித்திக்கும் தானே''
என்று திருமூலரும்,

''மொழிக்குத் துணை முருகாவெனும் நாமங்கள்''
என்று அருணகிரியாரும்,

''உன் நாமமே உச்சரித்திடும் அடியார் நாமமே நானுச்சரிக்க வசமோ''
என்று தாயுமானவரும்,

''நற்றவத்தவர் உள்ளிருந்தோங்கும், நமச்சி வாயத்தை நான் மறவேனே''
என்று வள்ளலாரும்,

''நாமஞ் சொல்லுவோம் நமனை வெல்லுவோம்''
என்று யோகர் சுவாமிகளும்,

''நலந்தருஞ் சொல்லை நான் கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம்''
என்று திருமங்கையாழ்வாரும்,

''வேள்விகளில் ஜபம் செய்யும் வேள்வியாக இருக்கிறேன்''
என்று பகவத்கீதையில் கிருஷ்ணரும்,

''கனவில் முனகும்போது மறந்தும் பெயர் சொல் பவனுடைய காலுக்கு என்தோல் செருப்பு''
என்று கபீர்தாசரும்,

''நாம ஜெபம் என்பது எல்லாக் களைப்பையும் போக்கக் கூடிய சாதனம்''
என்று விநோபாஜியும்,

''கடவுளும் அவர் பெயரும் ஒன்றே; வேறுபட்டவை அல்ல. திருநாமமே கடவுளாகும்''
என்று சுவாமி இராமதாசரும்,

''பகவானின் நாமங்களைச் சொல்லித் துதியுங்கள்; அவனைப் பற்றிப் பக்தர்கள் பாடிய பாடல்களைப் பாடுங்கள்; பிறகு உங்கள் காரியங்களை எப்படிச் செய்யவேண்டும் என்று உங்களுக்கு நன்ருக விளங்கும்''
என்று இராமகிருஷ்ணரும்,

''புதுமை நாவேது? எது இனிமையானது? உண்மையானது, பயனுள்ளதுஎன்று உனக்குத் தெரியும்! ஆகையால் ஒப்பற்ற இனிமையான சொற்களாகிய கோவிந்தா, தாமோதரா, மாதவா என்ற திருநாமங்களை உச்சரிப்பாயாக''
என்று ஜெயதேவரும்,

''கலியுகத்தில் ஆண்டவனுடைய நாமமே திவ்யாமிருதம் அடைவதற்கான மேலாம் பொக்கிஷமாகும்''
என்று சுவாமி சிவானந்தரும்,

''ஆத்ம சாதனங்களுள் நாம ஜபம் மிகச் சுலபமானது. எப்பொழுது வேண்டுமானுலும் நாமத்தை ஓதிக்கொண்டே இருக்கலாம்''
என்று சுவாமி சித்பவானந்தரும்,

''கடவுள் நாமத்தை நம்பிக்கையோடோ நம்பிக்கையற்ருே நீ ஜெபித்தாலும் அந்த நாமமே நம்பிக்கை அளித்துவிடும்''

என்று ஸ்ரீ சத்திய சாயிபாபா அவர்களும் கூறியுள்ளார்கள். இத்தனை மகான்களுடைய கருத்துக்களும் ஒன்ருகவே இருக்கின்றன. ஆதலால் நாமும் அவ்வழி நிற்போமாக!

நாம் தருமத்தைக் காப்பாற்றினுல் நம்மைத் தருமம் காப்பாற்றும் என்பது உபநிஷத்து வாக்கியம். தருமத்திற்கு அடிப்படை தியாகமாகும். தியாகம் இல்லாது எந்தத் தருமமும் நிலைபெற்றதில்லை. தினமும் நாம் சோறு ஆக்குவதற்கு அரிசி எடுத்தவுடன் ஒரு பிடி அரிசியை ஒரு பாத்திரத்தில் போட்டு வைத்தால் அதைக் கொண்டே எவ்வளவோ தருமங்கள் செய்யலாம். சுவாமி சிவானந்தர் ''கொடு! கொடு! கொடுத்துக் கொண்டே இரு'' என்று உபதேசிக்கின்ருர்.

தரும சிந்தனை உள்ளவன் தான் தன்னைப்போல மற்றவனையும் எண்ணுவான். பொருட் பற்றுள்ள உலோபி தன்னையும் ஏமாற்றி, மற்றவர்களையும் ஏமாற்றி, கடவுளையும் ஏமாற்றிவிடுகின்ருன். கடவுள் தந்த பொருளைக் கடவுளுக்கே கொடுக்க அறியாதவன் எப்படி நன்றிக் கடனைச் செலுத்துவான். ஆகவே கடவுளையும் தருமத்தையும் மறவாது வாழ்வோமாக!

# சிதறிக் கிடக்கும் சிந்தனைப் பூக்கள் (1)

— A. குலசேகரன் —

1. வேதனைப்படுவதும் நேசிப்பதும் எல்லா சந்தோசங்களிலும் மிகத் தூய்மையான சந்தோசம்.
2. பாவமின்றி இவ்வுலகுக்கு வந்தவர் அடிபடாமல் இவ்வுலகத்தை விட்டு போகவில்லையாஞல் பாவத்தில் இங்கு வாழ்ந்தவர்கள் அடிபடலாகாது என்று கருத்தாக முடியாது.
3. துறவி விசனத்துடன் இருக்க காரணமே கிடையாது, சந்தோசத்துடனிருக்க பல காரணங்கள் உண்டு ஏன் என்ருல் மக்களை விட துறவி கடவுளுக்கு அதிக சமீபமாய் அடிக்கடி ஆண்டவரை சந்திப்பவருமாயும் கடவுளின் செல்லப்பிள்ளையாயும் துறவி உள்ளபடியால்.
4. துன்பம் எனும் அலைகள் எத்தனை உயர்ந்து எழும்பினுலும் நமது உள்ளங்களை இன்னும் உயர்த்துவோமாக. நீரில் மிதக்கும் செடிகளைப்போல் நாம் கடந்து செல்வோமாக. அவை தண்ணீரில் அழுத்தப்பட தங்களை விட்டுவிடுவதில்லை. நீர் மட்டத்திற்கு மேலே அவை எப்பொழுதும் எழும்பி தோற்கடிக்கப்பட முடியாத தங்களது மலர்களை வெளிக்காட்டுகின்றன.
5. பாதையில் கிடக்கும் கற்களை உயர ஏறும் படிகளாக ஞானி அமைத்துக்கொள்ளுகிருன்; பலவீனனும் கோழையும் அவற்றின் மீது இடறி விழ தன்னை விட்டுவிடுகிருன்.
6. சிவ தன்மையை உணர்ந்தோர் ஆயிரம் வசதிகளும் நிறைந்த செல்வத்தை அடைந்தவர்க்கும் சமனுகும். செல்வத்தை குறுகிய வழியில் அடையலாம், இது நிலையற்றது. ஆனுல் சிவதன்மையை அடைவதற்கு நேர் வழியும் குறுகிய காலமும் போதுமானதாகும். இது நிலையானது.

# மதமாற்றத்தைத் தடுப்பதற்கான வழிமுறைகளும், மத வளர்ச்சிக்குத் தேவையான செயற்பாடுகளும்

க. ப. லிங்கதாசன்

அனைத்து மதங்களுக்கும் நடு நாயகமாய்த் திகழ்வதுடன் அகிலமெங்கும் பரந்து விரிந்து, ஒப்பற்ற உயரிய நோக்கை உலக மக்களுக்கு உணர்த்தி நிற்பது இந்து மதம். நவீன கால விஞ்ஞான உலகுக்கு வழிவகுத்துக் காட்டியதும் இந்து மதமே என்பதை விஞ்ஞானிகள் ஒப்புக்கொண்டுள்ளனர். மனிதனின் பரிணாம வளர்ச்சிக்கும், அவனின் சிந்தனைசக்திக்கும் தடை விதிக்காமல், பரந்து விரிந்த கொள்கைகளையும், கோட்பாடுகளையும் தன்னகத்தே கொண்டு ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றும், எம் மதமும் சம்மதமே என ஏற்றுக்கொள்ளும் உயர்ந்த நோக்கை உலக உயிர்களுக்கு உணர்த்திக் காட்டியது எமது இந்து மதமே. இது வெறும் புகழ்ச்சியல்ல. இந்து மதத்தையும், அதன் இயல்புக் குணங்களையும் நெறிமுறைகளையும், வகுத்துக் காட்டும் வழிமுறைகளையும், தத்துவங்களையும், இலட்சிய நோக்கையும் உள்ளத் தூய்மையுடன் ஆராய்வோர்க்கு நன்கு புலனாகக் கூடியதேயாம்.

இத்தகைய சிறப்புக்கள் அனைத்துமுடைய இந்து மதமே அறுபத்து நான்கு கலையம்சங்களுக்கும் உயிர் கொடுத்து இயற்கையோடு இணைந்து வாழும் ஒப்பரிய வாழ்வு முறையைக் கற்றுக்கொடுத்துள்ளது. அன்பு வாழ்வை, அற வாழ்வை, இன்ப வாழ்வை, இனிய வாழ்வைத் தரும் இந்து மதத்தினின்றும் ஒதுங்கிச் செல்வது, மதம் மாறிச் செல்வது இந்து மதத்தின் குறையல்ல. இக் குறைபாடுகள் இன்று நேற்றல்ல. காலங்காலமாக நிகழ்ந்து வரும் செயலாகவிருக்கிறது.

இதற்காக வருந்தியும், இக் குறைபாடுகளை எவ்வாறு நீக்கலாம் என்பதற்குத் தம்மால் இயன்ற வழிமுறைகளைக் கையாண்டும் வந்துள்ள சைவச் சான்றோர்களும், பெரியார்களும், சிவாச்சாரியார்களும், மதப்பற்றுடைய ஏனைய அறிஞர் பெருமக்களும் பாராட்டுக்குரியவர்களே. எனினும் இன்றுவரையும் தீராத நோயாக மாறி இருக்கும் இப் பிரச்சனைக்குப் புதிய வழியைக் காணவேண்டும் என்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

மத மாற்றத்துக்குச் சாதி பேதமே முக்கிய காரணம் எனக் காட்டிச் செல்வது பொருத்தமல்ல. ஏதோ ஒரு வகையில் ஏனைய மதங்களிலும் — இவ்விதப் பாகுபாட்டு உணர்வுகள் இல்லாமலில்லை. இருப்பினும் இந்து மதத்தினின்றும் பெருந்தொகையானோர் மதப் மாறிச் செல்வதற்கு அவரவர்களின் வறுமையே முக்கிய காரணமாக அமைந்திருக்கிறது என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளவேண்டும்.

வறுமை எந்தச் சமயத்தையோ, சாதியையோ, இனத்தையோ, நாட்டையோ விட்டு வைத்ததா? இல்லையே! வறுமையினின்றும் மீட்சிபெறமுடியாத-வழி தெரியாத மக்கள் சமயத்தின்மீது ஏதோ ஒரு குறையைச் சுட்டிக் காட்டி காரணம் கற்பித்துச் செல்வது எவ்வளவு மடமை என்பதை உணரவேண்டும்.

முன்னைய காலங்களிலே தமிழகத்துக்கு வாணிப நோக்கில் விஜயம் செய்த மேலை நாட்டவர்கள் வறுமையுற்று வாடிய மக்களுக்கு உதவுவதாகக் கூறி அவர்களின் அன்றாட வாழ்வுத் தேவைகளை அடிப்படையாக வைத்தே மதமாற்றம் செய்து வந்தனர் என்பதை நாமறிவோம். இந்த வழிமுறையையே இன்றும் கடைப்பிடித்து வருகின்றனர். ஈழத்தில் நடந்த பல வன்செயல்களில் பாதிக்கப்பட்டு வறுமைப் பிடியில் சிக்கிய பலரை அந்த மாயவலையில் சிக்கவைத்ததை நாம் கண்கூடாகப் பார்த்திருக்கின்றோமல்லவா? எனவே, பொருளாதார வளத்தில் இந்துப் பெருமக்கள் வளர்ச்சியுறுவார்களேயானால் அந்தப் போலி வேடத்தில் சிக்கமாட்டார்கள் என்பதே உண்மையாகும்.

ஒரு காலத்தில் இந்தியா என்றால் வறுமை நாடு என்று மேலைத் தேயத்து மக்கள் எண்ணியதுண்டு. இன்று அந்த நிலை மாறியிருந்தபோதிலும், தென்னாடு - தமிழகம் இன்னும் வறுமைப் பிடியில் இருந்து முற்றாக விடுபடவில்லையாகையால் மதம் மாறும் வேலை இன்னும் நடைபெறுவதாக அறிகிறோம். இதே நிலைதான் இன்றும், என்றும் மலையகத்தில் நிலவுகிறது.

வறுமைப் பிடியில் சிக்கவைத்து அடிமைகளாக ஆக்கப்பட்டால் இந்த மக்கள் சொல்வதை எல்லாம் செய்வார்கள் என்பது அவர்களின் எண்ணம். அதனால் தானே சுதந்திர உரிமைகள் பறிக்கப்பட்டு, பொருளாதார வளமில்லா வறுமைக் குழிக்குள் தள்ளப்பட்டு சதா அடிமை வாழ்வின் அவலத்தில் மிதித்துத் துன்புறுத்தல் செய்யப்படுகிறது?

இன்று இம் மக்களுக்குத் தேவைப்படுவது சாதி, மத, இன பேதங்கள் அல்ல. வறுமைப் பிடியில் இருந்து நீங்கி வளமான வாழ்வைப் பெறுவது. தருணம் பார்த்துப் பசிப்பிணி போக்க வரும் பலர் அப்பாவி மக்களை மதம் மாற்றி விடுகின்றனர். இதற்கு வழியொன்றைத்தான் இந்துமதப் பெரியார்களும், அறிஞர்களும், இந்துமத ஸ்தாபனங்களும், ஏனையோரும் ஒருங்கிணைந்து காணவேண்டும்.

மடாலயங்களும், அறநிலையங்களும், தபோவனங்களும், குருகுலப் பள்ளிகளும், சமய மன்றங்கள், சங்கங்களும், வருமானம் பெறும் ஆலயங்களும், புராணகாலப் புண்ணிய தலங்களும், பிரசித்தி பெற்ற சிறு ஆலயங்களும் ஒருங்கிணைந்து இந்துமத வளர்ச்சிக்கு என ஒரு பொது வேலைத் திட்டத்தைத் தொடங்க வேண்டும். அவ் வேலைத் திட்டத்தின் மூலமாக ஸ்தாபன ரீதியாகச் செயற்படுவதனால் வறுமையினால் வழிதவறிப் போகும் இந்து மக்களுக்கு உதவி செய்து காப்பாற்றவேண்டும். இப் பணிக்கு இந்த சமய கலாசார அமைச்சு முன்மாதிரியாகத் திகழவேண்டும்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் சுதந்திரத்திற்கு முன்னும் சரி, பின்னும் சரி, இற்றைவரையுமே உயிர் உடமைகளையே காப்பாற்றிக் கொள்ள முடியாத தமிழ் பேசும் இந்துப் பெருமக்கள் தமது சமயத்தையும், வழிபாட்டுத் தலங்களையும், கலை, கலாச்சாரப் பண்பாடுகளையும் கட்டிக் காத்து வளர்ப்பதெப்படி? இத்தகைய முயற்சிகளில் அவ்வப்போது பெருந்தேக்கநிலை உண்டானதை நாம்மறத்தலியலாது.

எனினும், இந்துப் பெருமக்களின் அயராத முயற்சி வீண்போகவில்லை. உயிரினும் மேலான தமிழையும், சைவத்தையும் தம்மாலியன்ற அளவு பாதுகாத்து வந்துள்ளனர் என்பதையும் எவரும் மறுத்தலியலாது. ஆனாலும் நலிவுறும் எமது சமயத்தை வளர்ப்பதற்கு யாது செய்தல் நலமென ஆராய்வது பொருத்தமாகும்.

மேல் மட்டத்திலான ஆய்வுகள், கருத்தரங்குகள், பிரசாரங்கள், சொற்பொழிவுகள், நூலாக்கங்கள், விழாக்கள் என்பனவற்றோடு அன்றாட வாழ்வின் அடிமட்டத்திலான செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் எனச் சிந்தித்தல் அவசியமாகிறது. அடிமட்டத்திலான செயற்பாடுகளே இன்று மிக அவசியமாகும்.

வீட்டுக்கு வீடு, வீதிக்கு வீதி, தோட்டத்துக்கு தோட்டம், கிராமத்துக்குக் கிராமம், நகரத்துக்கு நகரம் அப்பப்பா! எங்கணும் கோயில்கள்! ஆமாம், கோயில்கள் வளர்ந்துள்ள அளவுக்கு பூசைகளும், விழாக்களும் வளர்ச்சி பெற்றுள்ள அளவுக்கு மக்களிடையே, வளரும் இளம் சந்ததியினரிடையே மதப்பற்றோ, மதம் பற்றிய அறிவோ, விளக்கங்களோ வளர்ந்துள்ளனவா? என்றால் பூச்சியமே! காரணம், நவநாகரீகப் போக்கும், நடையுடை பாவனையும் மாறிச் சமயப் பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் தேய்ந்து திசைமாறிச் செல்கின்றன. இந்து சமயத்தைப் பற்றிய ஆழமான, தெளிவான அறிவும் மறைந்து வருகின்றன. இவற்றைப் போக்க யாது செய்யவேண்டும்?

சகல கோயில்களிலும், தேவாரத் திருமுறை வகுப்புகள், சமயபாட வகுப்புகள், வாரத்துக்கு ஒரு நாளேனும் சமயச் சொற்பொழிவுகள், சமய விளக்கங்கள் என்பன நிகழவேண்டும். இவற்றை அந்தந்தக் கோயில் பூசகரோ, அர்ச்சகரோ; ஐயரோ, குருக்களோ பொறுப்பேற்று நடத்தவேண்டும். பிறமதத்தவர்களின் வழிபாட்டுத் தலங்களிலே சமய வளர்ச்சிக்குத் தேவையான ஏற்பாடுகளை அவ்வவ் மதத்துக் குருமார்களே முன்னின்று செய்வதனை நாம் அவதானித்து வருகிறோம். அதனால் அம் மதங்கள் வளர்ச்சிபெற ஏதுவாக அமைகிறது.

எமது அர்ச்சகர்கள், குருக்கள் அனைவரும் பூசைகள், சடங்கு, சமயச் சம்பிரதாயங்கள், திருவிழா, கும்பாபிஷேக வைபவங்களின்போது நடைபெறும் கிரியைகள், பிறப்பு, இறப்பு, ருது சாந்தி, திருமணம், சோதிடம் போன்ற சமயச் சடங்குகளில் மாத்திரமே முக்கிய கவனம் செலுத்துகின்றார்கள். அவ்வாறான கிரியைகளுக்குத் தேவையான வேத மந்திரங்களையும், கிரியா மார்க்கங்களையுமே கற்றுத் தம்மை வேறுபடுத்திக் காட்டி வருதல் இந்துமத வளர்ச்சிக்கு உகந்தது அல்ல.

கோயில்களே எமது சமய, கலை, கலாசாரப் பண்பாடுகளை வளக்கும் புனித தலம். அத் தலத்தை நிருவகிக்கும் எமது சமயச் சான்றோர்களின் மத்தியில் முக்கிய இடத்தைப் பெறும் குருமார்களும், அர்ச்சகர்களும் சமயம் பற்றிய பொது அறிவைப் பெற்றிருப்பார்கள் அன்றோ? அவர்களே சமயத்தை வளர்க்கும் எங்கள் குருவாக விளங்குவதால் அவர்கள் மூலமாக சமயக் கல்வியை நாம் பெறுதல் எவ்வளவு பொருத்தமுடையது. குருமார்களே சுயமாக நிருவகிக்கும் ஆலயங்களில் கூட அவர்களின் போதனைகள் மிகக் குறைவாகவே காணப்படுதல் வேதனைக்குரியதேயாம்.

நமது வேத சாஸ்திர சம்பிரதாயங்களையும், சிவாகம விதி முறைகளையும், புராண இதிகாச விளக்கங்களையும் முறையாகப் பயின்று ஆசார விதிமுறைகளை அனுட்டித்து வரும் நமது பிராமணர்கள் சமய வளர்ச்சிக்குத் தேவையான வழிமுறைகளை அர்ச்சகர்களுக்கும், பூசகர்களுக்கும், ஐயர்களுக்கும், குருக்களுக்கும் உபதேசித்து வருதல் வேண்டும்.

எமது இந்து மதம் குரு, சிஷ்ய முறைப்படி சிறந்த வழிமுறைகளுடன் நெறிப்படுத்தப்பட்டு வளர்க்கப்பட்டு வந்துள்ளதை யாமறிவோம். எனவே, தலைமைப்பீடத்தை அலங்கரிக்கும் மத்திய நிலையத்தின் பிரதம நாயகர்களாகத் திகழும் சமயக் குரவர்களும், சைவாச்சாரியார்களும், மடாதிபதிகளும் ஒன்றிணைந்து வரையறை செய்யப்பட்ட ஒழுங்கின் மூலம் நமது இந்து சமய வளர்ச்சிக்குத் தேவையான புதிய வழிமுறைகளைக் கையாள வேண்டும் என்பது அடியேனின் அன்பான வேண்டுகோளாகும்.

எதிர்வரும் காலங்களில் நடைபெறவிருக்கும் அகில உலக இந்து மாநாட்டில் இவ்விடயம் பற்றி ஆய்வுக்கு எடுத்துக்கொள்வார்கள் என்பது எனது கருத்தாகும்.

அடியேனின் சிற்றறிவுக்கு எட்டியபடி இந்துமதத்தின்மீது ஆழ்ந்த பற்றினால் எழுந்த தாகத்தினால் காய்தல் உவத்தலின்றி எனது ஆய்வினைச் செய்துள்ளேன். வாழ்க தமிழ்! வளர்க இந்து கலாசாரம்!

# கடவுளின் படைப்பு

● மாஸ்டர் சிவலிங்கம்

பிள்ளையார் கோயிலுக்குப் பக்கத்திலேயுள்ள ஆலமர நிழலிலே அமர்ந்து பக்திப்பாடல் பாடிக் கொண்டிருந்தார் ஒரு சாமியார்.

உச்சிவெயில் வேளையிலே அவ்வழியால் வந்து கொண்டிருந்த நாஸ்திகன் நல்லதம்பி, நிழலுக்காக ஆலமரத்தின் கீழ்வந்து சாமியாருக்குப் பக்கத்திலே அமர்ந்தான்.

சாமியாரின் பக்திப்பாடலை நாஸ்திகன் நல்ல தம்பியால் ரசிக்க முடியவில்லை. சாமியாரிடம் கடவுளைப் பற்றி ஏதாவது கேள்வி கேட்டு, அவரை மட்டம் தட்டவேண்டும் என்று திட்டம் போட்டான்.

''சாமியாரே! கடவுள் ... என்று பாடிக்கொண்டிருக்கிறீங்களே ..... உங்களுடைய கடவுள் எங்கேயிருக்கிறார்?'' என்று கேட்டான்.

''தம்பி! உன்னைப் பார்த்தால் படித்தவன் போல் தெரிகிறது. கவிஞர் கண்ணதாசன் இந்தக் கேள்விக்கு மிக அழகாகப் பாடல் ரூபத்திலே பதில் சொல்லியிருக்கிறார். இதோ அப்பாடல் —

பூச்சியத்துக்குள்ளேயொரு
ராச்சியத்தை ஆண்டு கொண்டு
புரியாமலே இருப்பான் ஒருவன்—அவனை
புரிந்து கொண்டால் அவன்தான் இறைவன்

இப்படிச் சாமியார் பாடியதும் தலையைச் சொறிந்தபடி ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தான். பின்பு சாமியாரிடம் மற்றுமொரு கேள்வியைக் கேட்டான்.

"சாமியாரே ... ! உங்கள் கடவுளுக்குச் சரியாகப் படைக்கவே தெரியாது'' என்று கூறிவிட்டுப் பலமாகச் சிரித்தான்.

என்ன தம்பி இப்படிச் சொல்லிவிட்டாய் ... எல்லாம் வல்ல இறைவனுக்குப் படைக்கத் தெரியாதா?..... எங்கே, எதை, எப்படி படைக்கவேண்டும் என்பதையெல்லாம் நன்கு உணர்ந்தே அனைத்தையும் ஆண்டவன் படைத்திருக்கிறான்'' என்றார் சாமியார்.

''சாமியாரே! இதோ மேலே பாருங்கள் ... இந்தப் பெரிய ஆலமரத்தில் குஞ்சுக் குஞ்சுப் பழங்களைப் படைத்திருக்கிறாரே ... அதோ பாருங்கள் அந்தச் சிறிய பூசனிக்கொடியிலே பெரிய பெரிய இராட்சதக்காய்களை உருட்டி உருட்டி விட்டிருக்கிறாரே ..... அவருக்குச் சரியாகப் படைக்கத் தெரிந்திருந்தால், ஆலமரத்திலே பெரிய காய்களையும பூசனிக்கொடியிலே சிறிய காய்களையுமல்லவா படைத்திருக்க வேண்டும்?'' என்று கேட்டுவிட்டு வெற்றி பெற்றவனைப் போல பெருஞ் சிரிப்புச் சிரித்தான் நாஸ்திகன்.

''இறைவா! நீதான் இவனுக்குப் புத்தி புகட்ட வேண்டும்'' என்று மனதிற்குள் பிரார்த்தனை செய்தார் சாமியார்.

தனது கேள்விக்குச் சரியான பதில் கூற முடியாமல் மௌனமாகி விட்டார் சாமியார் என்று எண்ணி இறுமாப்படைந்தான் அந்த நாஸ்திகன். அப்போது ...

அணில் ஒன்று வந்து ஒரு ஆலம் பழத்தைக் கடித்தது. உடனே அப்பழம் நாஸ்திகனுடைய தலையிலே 'படக்!' என்று விழுந்தது.

''பார்த்தாயாதம்பி? பூசனிக்காயைப் போல இராட்சதக்காயை ஆலமரத்திலே கடவுள் படைத்திருந்தால் உன்னுடைய தலை என்ன ஆகியிருக்கும் ..... ?''

''ஆலமர நிழலுக்காக மக்கள் அதன் கீழ் வந்து அமர்வார்கள். தப்பித்தவறி ஆலம்பழம் அவர்களின் தலையிலே விழுந்தாலும் விழலாம் என்ற காரணத்தாலேயே கடவுள் ஆலமரத்தில் 'குஞ்சுக் குஞ்சு'ப் பழங்களைப் படைத்தார்.''

''பூசனிக் கொடிக்குக் கீழே யாராவது பூந்து படுப்பார்களா ...? அதுதான் நீ சொன்ன மாதிரி பெரிய பெரிய இராட்சதக் காய்களை பூசனிக் கொடியிலே உருட்டி உருட்டி விட்டிருக்கிறார்.''

இப்படிச் சாமியார் விளக்கிக் கூறியதும் பதில் கூற முடியாத நாஸ்திகன், தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு கால் போன போக்கிலே சென்று கொண்டிருந்தான்.

## உயிரெழுத்துக்களில் உன்னை வாழ்த்திடுவேன்!

செல்வி கனகா சாந்தி

''அன்பே சிவம்'' எனும்;
அர்த்தமுள்ள இந்து மதத்தின் அரிய சொல்லை;
ஆணித்தரமாக எடுத்து விளக்கும்;
இந்துவே நீ
ஈழத்தில் சமயத்தின் ஒளி விளக்கு!
உன்னதமான நோக்குடைய நீ
ஊர்ந்து லண்டனுக்கும் சென்று விட்டாய்!
எம்பெருமானின் அருளால் — நீ;
ஏற்றம் பெறுவாய் என்பதில் - எள்ளளவும் ;
ஐயமேயில்லை.
ஒன்று பட்டால் உண்டு வாழ்வு எனும்
உண்மையை;
ஓங்காரமிட்டே உரைக்கின்றாய் —
மதமாற்ற நோயின்
ஔடதமே வாழ்க! வளர்க நீ!!

## அறிவுக்கருவூலம்

தயாரிப்பு : நா. ஹரிதாஸ்

# குருதி

உணவு, வாயுக்கள் போன்ற பதார்த்தங்கள் உடலினுள் உள்ள கலங்களுக்கு கொண்டு செல்வதற்காக பயன்படும் இன்றியமையாத ஒரு திரவ ஊடகமே குருதியாகும். சாதாரண ஒரு சுகதேகியான மனித உடலினுள் ஏறத்தாழ 5.5 இலீற்றர் குருதி அடங்கியுள்ளது.

செங்குருதிச் சிறு துணிக்கைகள், வெண்குருதிச் சிறு துணிக்கைகள் ஆகிய இரு கலங்களினாலும்; குருதிச் சிறு தட்டுக்கள் எனப்படும் உடல்களினாலும்; குருதித் திரவ விழையம் எனும் பாயத்தினாலும் குருதி ஆக்கப்பட்டுள்ளது.

குருதியில் அதிகஅளவில் காணப்படும் செங்குருதிச் சிறு துணிக்கைகள் உட்குழிவான தட்டை வடிவுடையவையாகும். இத்துணிக்கைகளுள் 'ஈமோகுளோபின்' எனப்படும் சேர்வை காணப்படுகின்றமையினாலேயே குருதி செந்நிறமாகக் காணப்படுகின்றது. இந்த செங்குருதிச் சிறு துணிக்கைகள் சிவப்பு என்பு மச்சையில் உற்பத்தியாக்கப்படுகின்றன.

வெண்குருதிச் சிறு துணிக்கைகள், செங்குருதிச்சிறு துணிக்கைகளை விட பருமனில் பெரியது, குறிப்பிட்ட ஒரு வடிவம் அற்றவையுமாகும். சில வெண்குருதிச்சிறு துணிக்கைகள் நோயுண்டாக்கும் பற்றீரியாக்களையும், வைரசுக்களையும் விழுங்கி விடுகின்றன. மற்றைய சில வெண்குருதிச் சிறு துணிக்கைகள் நோய்க் கிருமிகளுக்கு எதிரான பிறபொருளெதிரிகளை உற்பத்தி செய்கின்றன. இந்த வெண்குருதிச் சிறு துணிக்கைகள் நிணநீர் இழையங்களினுள்ளும், என்பு மச்சையினுள்ளும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

குருதிச் சிறு தட்டுக்கள் குருதி உறைவதற்கு உதவி புரிகின்றன. இவையும் சிவப்பு என்பு மச்சையினுள்ளே உற்பத்தியாக்கப்படுகின்றன;

குருதித் திரவ விழையத்தில் அமினோ வமிலங்கள், கொழுப்பமிலங்கள், கிளிசரோல், குளுக்கோசு, கனியுப்புக்கள், விற்றமின்கள் அல்புமின் எனும் திரவ விழையப்புரதம், குருதி உண்டாவதற்கு உதவும் பைபிரினோசன், பிறபொருளெதிரிகள், ஓமோன்கள், யூரியா போன்ற உடலுக்கு அவசியமான பதார்த்தங்கள் அடங்கியுள்ளன. இவை கலங்களிலிருந்து நுரையீரல்களுக்கு காபனீரொட்சைட்டை கொண்டு செல்கின்றன.

இதயத்திலிருந்து குருதியை அப்பாற் கொண்டு செல்லும் குழாய்கள் நாடிகள் எனவும், இதயத்தை நோக்கி குருதியைக் கொண்டு வரும் குழாய்கள் நாளங்கள் எனவும் அழைக்கப்படும்.

மனித உடலிலுள்ள குருதி பிரதானமாக நான்கு தொகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது. அவை A,B,AB,O என்பவைகளேயாகும். இவற்றில் ''AB'' தொகுதியைக் கொண்டிருப்பவர்கள் ''சர்வ வாங்கி'' களாவார்கள். அதே போல் ''O'' தொகுதியைக் கொண்டிருப்பவர்கள் சர்வ வழங்கிகளாவார்கள்.

## தத்துவ முத்துக்கள்

முதலில் முயற்சி செய்யுங்கள். பிறகு வெற்றியைச் சந்திக்கலாம். முதலில் உழையுங்கள், பிறகு ஓய்வெடுத்துக் கொள்ளலாம். முதலில் பலவீனத்தை அகற்றுங்கள், பிறகு துணிவைப் பெறலாம். முயற்சி, உழைப்பு. துணிவு ஆகிய மூன்றினால் ஆரம்ப காலத் துன்பத்தை வென்று அழகான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

— ஜேம்ஸ் ஆலன்

தவறுகளை ஒத்துக் கொள்ளும் தைரியமும், அவைகளை விரைவில் திருத்திக் கொள்ளும் பலமும் தான் வெற்றி பெறுவதற்கால சிறந்த குணாதிசயமாகும்.

— லெனின்

திறமையினாலும், அதிர்ஷ்டத்தினாலும் பெரும் புகழ் பெற்றவர்கள் மக்களின் ஆதரவைப் பெற்றிருப்பதற்கு உண்மையான காரணம் அவர்கள் எப்போதும் மனிதனாக இருப்பது தான்.

— கதே

வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தினால் எல்லோருமே சூரியனைப் போல் பிரகாசிக்க முடியும். இல்லையெனில் மெழுகுவர்த்தி தான்.

— நெப்போலியன்

# அன்பளிப்பு

"பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்து நீபாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உவப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே."

— மணிவாசகப் பெருமான்

படிக்கப் படிக்க தெவிட்டாத திருவாசகம் போன்ற இந்துசமய திங்கள் இதழான "இந்து கலாசாரம்" இதழுக்கு என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

— அன்பன்



## ஔவையார் அரங்கு

தயாரிப்பு: ஜெயா சாந்தி

# விருந்தினரை இன்முகம் கூறி வரவேற்கவேண்டும்!

இல்லம் என ஒன்று இருந்தால் அதில் இல் வாழ்க்கைக்குரிய ஏராளமான சம்பவங்கள் நடைபெறும். இன்ப துன்பம், இறப்பு, பிறப்பு, சுகம் துக்கம் என்பவைகள் தாம் வாழ்க்கை எனும் புத்தகத்தின் பக்கங்களாகும். இவைகளில் ஒன்றுதான் விருந்தோம்பலாகும். அதுவும் இந்துக்களாகிய எமக்கு விருந்தோம்பல் ஒரு புண்ணியம் என்றே கூறுவது பொருத்தமாகும். ஆனுல் இந்த விருந்தோம்பல் எனும் செய்கைக்கு மகுடம் சூட்டுபவள் பெண். இல்லறத்தில் நடைபெறும் அத்தனை செய்கைக்கும் பங்கு வகிப்பவள் பெண்ணே! எமது வீட்டுக்கு அன்ருடம் எத்தனையோ பேர் வருவோர், போவோர், ஏன் இரப்போரும்தான். எனவே வீட்டுக்கு வரும் விருந்தினரை இன்முகம் கூறி வரவேற்றலே இல்லத்தரசிகளின் இனிய பண்பாகும். இதற்காகத்தான் வள்ளுவர்,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரித்து
நோக்கக் குழையும் விருந்து."

என விளக்கியுள்ளார்.

நாம் வந்த விருந்தினரை இன்முகம் கூறி வரவேற்று அன்புடன் அவர்களுக்கு இலைக்கஞ்சியை கொடுத்தாலும் அது அவர்களுக்கு அமிர்தமாகும். அதை விடுத்து நாம் முகத்தை வெடுக்கென வைத்துக்கொண்டு வெள்ளைக்கார உணவு வகைகள் முழுவதையும் கொடுத்தாலும் அது வந்தவர்களின் முகத்தை வாட வைத்துவிடும்.

இதையேதான் ஔவையாரும்;

"உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம்
மனையில் உண்ணுமை கோடி பெறும்"

என இதிலிருந்தே தெரிகிறதல்லவா எமது இன்முகம் கூறுமையின் தாக்கம் எவ்வளவென்பது? உணவிட்டு வாழ்வோருடைய வாழ்க்கைக்கு வள்ளுவர் கூறிய மற்றுமொரு குறள்,

"வித்தும் இடல் வேண்டும் கொல்லோ
விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்"

என அதாவது வந்த விருந்தினரை முன்னே போற்றி உணவளித்து மிஞ்சிய உணவை உண்டு வாழ்கின்றவனுடைய நிலத்தில் விதையும் விதைக்க வேண்டுமோ? என எவ்வளவு ஆணித்தரமாக வினவுகிருர் பாருங்கள். இதைவிட நறுந்தொகை வரி இவ்வாறு கூறுகிறது.

"உண்டிக் கழகு விருந்தோடுண்டல்"

அதாவது உணவுக்கு அழகு என்பது விருந்தினரோடு உண்ணுதலாகும். ஆகையால் நாம் விருந்தினரை எதிர்பார்த்து அவ்வாறு வருவோரை இன்முகம் கொடுத்து விருந்துண்ணப் பழகிக் கொள்ளல் வேண்டும்.

## பொன் மொழிகளில் பெண்மணிகள்!

* குழந்தை உள்ளம் கொண்டவள் பெண். அவளைக் குமுறும் கடலாக மாற்றுபவன் ஆண்.
* பெண்ணின் குளிர்ந்த பார்வை முரடனையும் கூட குழந்தை உள்ளம் கொண்டவனுக மாற்றிவிடும்.
* சிந்தனைக்கு — அவன். மெல்லியல்புக்கு — அவள். வீரத்துக்கு — அவன். இனிமைக்கும் நயத்துக்கும் அவள் — கடவுளுக்காக அவன். அவனிடம் அமைந்த கடவுள் தன்மைக்காக அவள்.
* பெண் பல விதத்தில் ஆணை விடச் சிறந்தவள். தன்னலப் பற்றே இல்லாது அன்பாக, தாயாக, தாதியாக, தியாகியாக, கொடையாளியாக வாழும் பெண்ணுடன் ஆண் ஒருபோதும் சமமாக நிற்கமாட்டான். அவளது இதயம் மூலம் வெளிப்படும் அன்பு. ஆணைவிட அவளை எவ்வளவோ உயர்த்திக் காட்டுகிறது.
* பெண்களால் உலகம் அழிந்ததுண்டு. ஆனுல் அழிவிலிருந்து காப்பவரும் பெண்கள்தான் என்ற உண்மையை மறுக்க முடியாது.
* ஒரு நல்ல பெண்ணின் மனக்கடலில் காதல் — கற்பு. தியாகம் — இரக்கம் எனும் நன்முத்துக்களைக் காணலாம்.
* ஒரு பெண்ணின் உண்மை அன்பில் ஓர் உயர்ந்த டாக்டரின் ஆலோசனையும் ஒரு நர்சின் பணிவிடையும், ஒரு நல்ல தாயின் வாஞ்சையும் கலந்திருக்கும்.
* குழந்தைக்கு சோறு கொடுத்தால் தாய்ப் பாலை மறக்கும். பெண்ணுக்கு கணவன் வந்தால் தாயை மறப்பாள்.

*With the Best Compliments*

*of*

**ESWARAN BROTHERS**

SOLE AGENTS FOR " SUPREEM " STEEL FURNITURES

267, Sea Street, Colombo - 11.

Tele : 32599, 548720 & 35842 Telex : 21275 ESWARAN CE

WITH THE BEST COMPLIMENTS

OF

*Translanka Investments Ltd.*

ஆசிச் செய்தி

# மகத்தான சேவையாற்றி வருகிறது இந்துகலாசாரம்



இந்து சமயத்தைப் பேணி வளர்க்கும் உயரிய பணியில் ஈடுபாட்டுடன் செயலாற்றி வரும் 'இந்து கலாசாரம்' திங்கள் இதழ் இன்றைய சூழ்நிலையில் ஒரு மகத்தான சமயசேவையை ஆற்றி வருவதைக் குறிப்பிட்டுக் கூற வேண்டும். இப் பணியில் 'இந்து கலாசாரம்' தொடர்ந்தும் ஈடுபட்டு இந்து சமயத்தின் பல்வேறு பரிணாமங்களை இந்துக்களுக்கும் உலகுக்கும் எடுத்துக்காட்டவேண்டும் என்பது எனது அவா.

சமயத்திற்கு எதிரான சித்தாந்தங்களும் இயக்கங்களும் இன்று உலகில் தீவிரமாகச் செயற்பட்டு வந்தபோதிலும் ஆதி மனிதனைப் பண்படுத்திப், பண்பாட்டை வழங்கி அவனை நாகரிக மனிதனாக்கியதில் சமயக் கோட்பாடுகளுக்குப் பெரும் பங்கு உண்டு. விஞ்ஞான, தொழில் நுட்ப அறிவு வளர்ச்சி மனிதனின் பொருளாதார வாழ்க்கையை மேம்படுத்த உதவியவிடத்து சமயங்கள் அவனுடைய ஆன்மீக வாழ்க்கையை மேம்படுத்தின; மனிதனிடம் இயற்கையாகவே அமைந்த ஆன்மீக உணர்வுகளுக்கும் தேவைகளுக்கும் சமயங்கள் அவசியமாயின. சமயக் கோட்பாடுகள் மனித வாழ்க்கைக்கான இலட்சியங்களையும் நோக்கங்களையும் வழங்கின; மனித வாழ்வைப் பொருள் பொதிந்ததாக்கின.

உலகளாவிய சமயங்களில் பழம் பெருமையும் தொன்மையும் வாய்ந்த இந்து சமயமும் அதன் உயரிய தத்துவ விளக்கங்களும் போற்றிப் பாதுகாக்கப்படல் வேண்டும்.

சமயப் பணியில் தம்மை அர்ப்பணித்துள்ள 'இந்து கலாசாரம்' இத்துறையில் மேலும் சிறந்த பணியினை ஆற்ற வேண்டும்.

இந்து சமயத்தின் கோட்பாடுகளிலும் தத்துவ விளக்கங்களிலும் இன்று சமுதாயம் எதிர்நோக்கும் நானாந்த பிரச்சினைகளுக்குப் பொருத்தமான கருத்துக்களும் சிந்தனைகளும் பல இருப்பதைப் பல்வேறு அறிஞர்கள் எடுத்துக்காட்டி வருகிறார்கள். இந்து சமய தமிழ் அலுவல்கள் நடத்திவரும் 'இந்து சமயமும் சமுதாயப் பணிகள்' என்ற தலைப்பிலான கருத்தரங்குகளை இவ்விடத்து குறிப்பிட்டுக் கூறுதல் வேண்டும். இவ்வாறான புதிய விடயங்களுக்கும் ஆய்வுரைகளுக்கும் 'இந்து கலாசாரம்' களம் அமைத்துக் கொடுக்கவேண்டும்.

'இந்து கலாசாரத்தில்' சமயப் பணிகள் மென்மேலும் மேலோங்க எனது வாழ்த்துக்கள்.

சோ. சந்திரசேகரன்,
தலைவர், சமூக விஞ்ஞானக் கல்வித்துறை,
கொழும்புப் பல்கலைக் கழகம்.

சகல உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்
සියලුම දේශීය ගොවි කාර්මික ද්‍රව්‍ය වෙළෙන්දෝ
විෂ්ණු ට්‍රේඩිං කෝ.
விஷ்ணு ரேடிங் கோ.
VISNU TRADING CO.
174, 4th Cross Street. Colombo-11.
நாலாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11.
T'phone: 24364 & 434874

# திரு. பாஸ்கரதாஸுக்கு பாராட்டு விழா

இந்து சமய கலாசார அமைச்சின் பணிப்பாளராக சுமார் 10 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி வந்த திரு. ஏ. பாஸ்கரதாஸ் அவர்கள் அமைச்சில் தான் வகித்துவந்த பதவியில் இருந்து விலகி வெளிநாடு செல்வதையிட்டு அமைச்சின் இதர பணிப்பாளர்களும், அதிகாரிகளும், ஊழியர்களும், அமைச்சு அலுவலகத்தில் அமைச்சின் செயலாளர் திரு. சி. எஸ். மாணிக்கவாசகர் அவர்கள் தலைமையில் ஒரு பெரும்வரவேற்பு உபசாரமளித்து கௌரவித்தனர்.

அங்கு அமைச்சின் செயலாளர் திரு. சி. எஸ். மாணிக்கவாசகர் பேசுகையில் இந்து சமய கலாசார பணிப்பாளராக திரு. ஏ. பாஸ்கரதாஸ் அவர்கள் செய்துள்ள பணி மகத்தானதென்றும் அவர்காலத்தில் தான் இந்து சமய ஸ்தாபனங்கள் பதிவு செய்யப்பட்டு நிதி உதவி வழங்கப்பட்டதென்றும் 83 கலவரத்தில் பாதிக்கப்பட்ட பல ஆலயங்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டதென்றும் உலக இந்து சமய ஆராய்ச்சி மகாநாடு நடைபெற்றதென்றும் திரு. பாஸ்கரதாஸ் அவர்கள் வெள்நாட்டிலிருந்து திரும்பி வந்ததும் மீண்டும் இந்து சமய கலாசார அமைச்சில் சேர்ந்து இந்து சமயத்திற்கும் கலாசாரத்திற்கும் தொண்டு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அமைச்சின் இதர பணிப்பாளர்களும் எழுத்தாளர்களும் திரு. பாஸ்கரதாஸின் குணாதிசயங்களைப் பாராட்டிப் பேசினர்.

இந்து கலாசார அமைச்சுக்கு திரு. பாஸ்கரன் ஆற்றியுள்ள பணிகளை, நினைவு கூரும் முகமாக இலங்கை உருவமைத்த வெள்ளித் தட்டு ஒன்று திரு. மாணிக்கவாசகரால் பரிசளிக்கப்பட்டது.

பின்னர் விருந்துபசாரம் நடைபெற்றது.



அமைச்சின் செயலாளர் திரு. சி. எஸ் மாணிக்கவாசகர் திரு ஏ. பாஸ்கரதாஸ் அவர்களுக்கு வெள்ளித் தட்டை பரிசளிப்பதையும் உதவி பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் கவனித்துக் கொண்டிருப்பதையும், திருமதி பாஸ்கரதாஸ் அமர்ந்திருப்பதை மேலேயுள்ள படத்திலும் கீழேயுள்ள படத்தில் இடமிருந்து வலம் திருவாளர்கள்:- எஸ். தெய்வநாயகம் ந. கருணானந்தராசா வி விக்கிரமராசா ஆ. பாஸ்கரதாஸ் திருமதி சாந்தி நாவுக்கரசன், வி. மன்மதன், கே. வடிவேல், எஸ். தருமசீலன் முதலியோர் அமர்ந்திருப்பதையும் அமைச்சின் ஊழியர்கள் பின் வரிசையில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

---

இந்துகலாசாரம்... [1ம் பக்கத்தொடர்]

தொழிலதிபர் திரு. டி. ஈஸ்வரன் பேசுகையில், 'இந்து கலாசாரம் என்ற குழந்தை பிறந்து ஒரு வருட காலத்தில் 'கையையும், காலையும்' மாத்திரம் அசைத்துக்கொண்டிருந்ததென்றும் இரண்டாவதுவருடத்திலே தவழ்ந்து நடக்கப் போகும் அறிகுறிகள் தென்படுவது தமக்கு பெரும் மகிழ்ச்சியைத்தருகிறது என்றும் கூறினார்.

சைவ முன்னேற்றச் சங்கத்தின்பொதுச் செயலாளரும், கும்பனித்தெரு ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி கோவில் அறங்காவல் சபை செயலாளருமான திரு. கே. பாலசுப்பிரமணியம் பேசுகையில், 'இந்து கலாசார இதழுக்கு தங்களால் இயன்ற எல்லா உதவிகளையும் புரிந்து வருவதாகவும் அதன் வளர்ச்சியில் தங்களுக்கும் பங்கு உண்டு' என்று கூறினார்.

ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி கோவில் அறங்காவல் சபைத்தலைவர் திரு. வி.டி.வி. தெய்வநாயகம் பிள்ளை அவர்கள் 2001 ரூபாய் அன்பளிப்பு கொடுத்து முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

விழாவுக்கு இந்து சமய கலாசார அமைச்சின் செயலாளர் திரு.சி. எஸ், மாணிக்கவாசகர், அமைச்சின் தமிழ் விவகார உதவிப் பணிப்பாளர் திரு. நகியா, செல்வி. சந்திரிகா சோமசுந்தரம், தொழிலதிபர் திரு. செந்தில் வேள் கொழும்பு தமிழ்ச்சங்க பொதுச் செயலாளர் திரு கே. கந்தசாமி முதலியோர் வருகை தந்திருந்தனர்.

கொழும்பு இந்து கலாசார மன்ற பொதுச் செயலாளர் திரு. ஏ.எம். துரைசாமி எல்லோருக்கும் நன்றி கூறினார்.

சைவ சிகாமணி திரு. ஏ. முத்துக்குமாரசாமி, பிள்ளையின் தேவார பாராயணத்துடன் விழா இனிது முடிவுற்றது.

With the Compliments

of

# RENUKA INDUSTRIES

**IMPORTERS & EXPORTERS**

*MANUFACTURERS:* **IN ALL KINDS OF**

**HOUSEHOLD**

**ALUMINIUM WARES**

170-172, OLD MOOR STREET,

COLOMBO-12.

Telephone : 35579


இப்பத்திரிகை கொழும்பு இந்து கலாசார மன்றத்திற்காக கொள்ளுப்பிட்டி, நெல்சன் ஒழுங்கை, 39/23-ம் இலக்க இல்லத்தில் வசிப்பவரும் இதன் ஆசிரியருமான திரு. ஏ. எம். துரைசாமி என்பவரால், கொழும்பு-12, டாம் வீதி, 201-ம் இலக்கத்திலுள்ள குமரன் அச்சகத்தில் 15-2-90ல் அச்சிட்டு வெளியிடப் பட்டது.